2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு

# நிலத்தை கையகப்படுத்தும் பணி தீவிரம்

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், அடுத்தகட்டமாக 2, 3, 4, 5 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இதற்காக 117.12 ஹெக்டர் நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நேரடி பேச்சுவார்த்தை மூலமாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு நிலத்தை தர நில உரிமையாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்கிடையே, மெட்ரோ ரயில் 3-வது தடத்தின் பணிக்காக நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் ரோடு, குட் ஷெப்பர்டு பள்ளி நிர்வாகத்தினரிடமிருந்து 17,495 சதுர அடி நிலம் நேரடி பேச்சுவார்த்தை மூலம் பெறப்பட்டது. இந்த நிலத்துக்குரிய இழப்பீடுத் தொகைக்கான காசோலையை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் எல்.நரசிம்மபிரசாத் பள்ளி நிர்வாகத்திடம் வழங்கினார். இந்த நிகழ்வின்போதுமாவட்ட வருவாய் அலுவலர்கள் கே.தர்ப்பகராஜ், என்.சத்தியநாராயணன், தலைமை பொதுமேலாளர் (மனிதவளம்) ஜி.ராஜரத்தினம் உள்ளிட்ட அலுவலர்கள்பலர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.